## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

அனுப்புநர்
திரு. ம.ரா. மோகன். இ.ஆ.ப., (ஓய்வு),
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600 018.

பெறுநர்
அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்

ந.க.1590/2015/கூ.தே-1 நாள்: 20.11.2015

அய்யா/அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுத் தேர்தல் – மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு தேர்தல் தொடர்பான வழிகாட்டுதல் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

*****

அண்மைக்காலத்தில் கூட்டுறவுத்தேர்தல்கள் நடத்துவது தொடர்பான ஒரு சில நிகழ்வுகள் பற்றி தேர்தல் ஆணையம் உயர்நீதிமன்றத்தில் தொடரப்படும் நீதிப்பேராணை மனுக்கள் (Writ Petitions) மூலம் அறியவருகிறது.

பொதுவாக மாவட்டத்தேர்தல் அலுவலர்கள் அனைவரும் இதுகாறும் தங்களுடைய தேர்தல் பணிகளை திறம்பட ஆற்றி தேர்தல்களை சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்திவரும் நிலையில், இம்மாதிரியான சில நிகழ்வுகள் கவலைதருவதாக அமைவதுடன், ஆணையத்தின் சட்டபூர்வ செயல்பாடுகளில் குறுக்கீடு செய்வதாகவும் அமையும்.

எனவே, இவ்வகையான நிகழ்வுகளுக்கு சிறிதும் இடம் தராது கூட்டுறவுத்தேர்தல்களை கூட்டுறவுச்சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு நேர்மையாகவும் சுதந்திரமாகவும் அமைதியாகவும் (Free, Fair and Peaceful) நடத்திட மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் அனைவரும் ஏற்கனவே ஆணையத்தின் பல்வேறு கட்டளைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இருப்பினும்

அவற்றுடன் கீழ்வரும் அறிவுரைகளையும் கண்டிப்பாகக் கைக்கொள்ள மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1) தேர்தல் ஆணையத்தால் மின்னஞ்சல் (E.mail) வழி அனுப்பப்படும் தேர்தல் திட்டம் பெற்றவுடன் தேர்தல் அறிவிக்கை (Election Notification) செய்திடல் வேண்டும்.
2) தேர்தல் நடத்துவதற்கு நியமிக்கப்படும் அலுவலர்களின் நியமன ஆணை உரிய முறையில் இருத்தல் வேண்டும்.
3) தேர்தல் பணி ஆணைகள் பெற மறுக்கும் அல்லது தவிர்க்கும் அலுவலர்கள் மீது உரிய

..2

ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலரைக் கேட்டுக்கொள்வதுடன், அது தொடர்பாக மாநில தேர்தல் ஆணையருக்கும் தேர்தல் ஆணையத்திற்கும் அறிக்கை அனுப்பவேண்டும்.

4) தேர்தல் நடவடிக்கைகள் எவ்வகையிலும் எந்நிலையிலும் பாதிக்கப்படாது, தொடர்ந்து நடைபெற மாற்றுத் தேர்தல் அலுவலர்களையும் நியமனம் செய்யவேண்டும்.

5) தேர்தல் அலுவலரால் தேர்தல் நிறுத்தப்படும்போது நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் சட்டப்படி முறையானது தானா என்று பரிசீலனை செய்யவேண்டும்.

6) தேர்தல் பணிக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள், மாவட்டத் தேர்தல் அலுவலரால் அறிவிக்கை செய்யப்பட்ட இடங்களில், நாட்களில், நேரங்களில் இருக்கிறார்கா? அவர்களுக்கான பணிகளைச் செய்கிறார்களா? என்பதினை உறுதி செய்வதுடன் அவர்கள் பணியினை மேற்பார்வையிடுதலும் வேண்டும்.

7) தேர்தல் பணிக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் ஆணையத்தின் ஒழுங்குமுறை என்றும் கட்டுப்பாடுகளுக்குள் அமைகின்றனர் என்பதைக் கருத்தில் கொண்டு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளாது விருப்பம்போல் விடுப்பில் செல்லவோ, தகவல் இன்றி இருக்கவோ அனுமதித்தல் கூடாது.

8) தேர்தல் நடவடிக்கைகளின்போது ஏற்படும், ஏற்பட்ட இடையூறுகள், பிரச்சினைகள், தகராறுகள் போன்றவற்றை சில சமயங்களில் நாளேடுகள் மற்றும் உயர்நீதி மன்றத்தில் தொடரப்படும் வழக்குகள் மூலம் மட்டுமே அறியவருகிறது. எனவே, இது பற்றி தகவல்களை விபரங்களை மாநிலத் தேர்தல் அலுவலருக்கும் மாநிலத்தேர்தல் ஆணையத்திற்கும் உடனுக்குடன் தெரியப்படுத்தவேண்டும்.

9) தேர்தல் நடவடிக்கைகள் எந்நிலையிலும் குறுக்கீடு செய்யப்படலாம், அல்லது தடுக்கப்படலாம் எனும் நிலை இருக்குமென்றால் அதனை முன்கூட்டியே அறிந்து (Intelligence) அல்லது பொதுவாக நிலவும் சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு காவல் துறைக்கு தெரிவித்து உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவேண்டும், சம்பவத்திற்கு பின்னர் காவல்துறையை நாடுவதும் இதனைக் காரணம் காட்டி தேர்தலை தன்னிச்சையாக நிறுத்துவதும் முற்றிலும் கூடாது.

10) தேர்தல் முடிவுற்றபின் தேர்தல் ஆவணங்களை முறையாக ஒப்படைத்தலையும், பாதுகாப்பாக வைத்திருத்தலையும் உறுதி செய்தல் வேண்டும்.

11) தேர்தல் பணிகள் தொடர்பாக, விதி 52 மற்றும் 53லும், தேர்தல் ஆணையத்தாலும் சொல்லப்பட்ட சட்டபூர்வ அறிக்கைகளை அவ்வவ்போது அனுப்பப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

(ஒம்./–)
ஆணையர்

**நகல்:**

மாநில தேர்தல் அலுவலர்கள்,
தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்வரும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் இது தொடர்பான உரிய அறிவுரைகள் வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## <u>தேர்தல் அலுவலர்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகள்</u>
## <u>(Guidelines and Instructions)</u>

1) தேர்தல் பணி தொடர்பான பணி அமர்த்தல் ஆணைகள் சட்டபூர்வமானது. அதை பெற மறுப்பதோ, அதன்படி செயல்பட மறுப்பதோ, துறை அளவு ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கைக்கும் உட்பட்டதாகும்.

2) தேர்தல் பணிக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் தொடர்பாக 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 52 மற்றும் விதி 53 மற்றும் இது தொடர்பாக மாநிலத்தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள கையேடுகள் ஆகியவற்றை முழுவதும் படித்து அதன்படி செயலாற்றுதல் வேண்டும்.

(சட்டம் விதிகள், மற்றும் ஆணையத்தின் கையேடுகள், சுற்றறிக்கைகள் பற்றிய விவரங்களை ஆணையத்தின் இணையதளம் – www.coopelection.tn.gov.in – வழி அறிந்துகொள்ளலாம்.)

3) தேர்தல் பணிக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள் தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பு, கட்டளை மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு மற்றும் மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலரின் கீழான மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலுக்குட்பட்டு சட்டம் மற்றும் விதிகளில் கண்டுள்ளவாறும், தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வழங்கப்படும் இதர உத்திரவுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் படியும் சரியான முறையில் தேர்தல்கள் நடத்துவதற்கு சட்டப்பூர்வமாக கடமைப்பட்டவராவர்.

4) விதி 52–(5)–ன்படி தேர்தல் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் அ த்தேர்தல் குறித்து அறிவிப்பு செய்யப்பட்ட தேதி முதல் மற்றும் அத்தகைய தேர்தல்கள் முடியும் வரை தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைக் (Discipline) குட்பட்டவர்கள் ஆவர். அவர்கள் அக்காலத்தில் அயல்பணிக்கு (Deputation) அனுப்பப்பட்டவராகக் கருதப்படுவர். எ னவே, தேர்தல் பணிக்காலத்தில் தேர்தல் ஆணையத்தின் அனுமதி இன்றி தேர்தல் பணியினைப் புறக்கணித்து எவ்வித விடுப்பிலும் செல்ல இயலாது.

5) சம்பந்தப்பட்ட சங்கங்களில் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதை முன்கூட்டியே சென்று உறுதி செய்தல் வேண்டும். தனது பணி தொடர்பான அனைத்து விவரங்களையும் இதற்கென ஓர் குறிப்பேடு (Diarty) வைத்து அதில் பதிவு செய்தல் வேண்டும்.

6) வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer) மற்றும் தேர்தல் அலுவலர் (Election Officer) தங்களது நியமன ஆணைப்படி தங்களுக்கான சங்கங்களுக்கு தேர்தல் அறிவிப்பில் (Election Notification) கண்டுள்ளவாறு அறிவிக்கப்பட்ட இடங்களில், அறிவிக்கப்பட்ட நாட்களில், அறிவிக்கப்பட்ட நேரங்களில் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். தங்களைத் தொடர்பு கொள்ளும் வகையில் தங்களது கைபேசி எண்களை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் ஆணையத்திற்கு நியமன ஆணை பெற்றவுடன் தெரிவித்திட வேண்டும்.

...2

7) இனம் **(6)–ல்** சொல்லப்பட்டதை உறுதிப்படுத்தும் விதமாக பணி தொடங்குவதற்கு முன்னர் தனது 'அலைபேசி' மூலம் அல்லது சங்கம் மூலமாக, தான் பணி இடத்தில் இருக்கும் தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் ஆணையத்திற்கு கண்டிப்பாகத் தெரிவித்திட வேண்டும்.

8) இது போன்று அன்றாடம் அறிவிக்கப்பட்ட பணி முடிவுற்ற பின்னரும் இனம் **(7)–ல்** குறிப்பிடப்பட்டோருக்கு தகவல் தெரிவித்திட வேண்டும்.

9) வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், திருத்தம் மேற்கொள்ளப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல், பரிசீலனை, தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், இறுதி வேட்பாளர் பட்டியல் **(படிவம்–20)** வெளியிடுதல், ஆகிய ஒவ்வொரு தேர்தல் பணியும் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவுற்ற உடன் **9445430205** என்ற ஆணையத்தின் அலைபேசி எண்ணிற்கு குறுந்தகவல் (SMS) கண்டிப்பாக அனுப்பிட வேண்டும்.

10) போட்டி இருந்து வாக்குப்பதிவு இருப்பின் வாக்குப்பதிவிற்கு முந்தைய நாள் அதற்கான இடம், வாக்குப்பெட்டி (Ballot Box) வாக்குச் சீட்டு (Ballot Papers) போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருக்கும் தகவல் தெரிவித்திட வேண்டும்.

11) வாக்குப்பதிவு அன்று வாக்குப்பதிவு தொடங்கும் நேரமும், தொடங்கிய பின்னர் ஒவ்வொரு மணி தோறும் பதிவாகிய வாக்குகள் விவரமும், வாக்குப்பதிவு முடிவுற்றபின் முடிவுற்ற நேரம் பற்றியும் தகவல் தெரிவிக்க வேண்டும். வாக்கு எண்ணுகையின்போது, ஆரம்பிக்கப்பட்ட நேரம், முடிவுகள் அறிவிக்கப்பட்ட நேரம் ஆகியவை அவ்வப்போது தெரிவிக்கப்பட வேண்டும்.

12) ஒவ்வொரு தேர்தல் நடவடிக்கை முடிவுற்ற பின்னர் உரிய சட்டபூர்வ அறிக்கைகளை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் ஆணையத்திற்கு உடனுக்குடன் அனுப்பிடல் வேண்டும். (ஆணையத்தின் e-mail ID – tncoopelectcomn@gmail.com)

13) தேர்தல் பணியின் போது எந்த ஒரு நிலையிலும் அசாதாரணமாக ஏற்படும் உடல்நிலை பாதிப்பினாலோ, வேறு ஏதேனும் மிகவும் தவிர்க்க முடியாத காரணத்தினாலோ தேர்தல் பணியில் தொடர்ந்து ஈடுபட முடியாத நிலை ஏற்படுமானால், மாற்றுத் தேர்தல் அலுவலர் (Alternative Election Notification) மூலம் அப்பணியினைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மூலமாக செய்திடல் வேண்டும்.

14) உடல் நலக்குறைவு போன்ற காரணங்களை திடீரென தெரிவித்து உரிய அறிவிப்பு மற்றும் மாற்று ஏற்பாடுகளை உறுதி செய்யாது தேர்தல் நடத்துவதை முடக்கம் செய்தால் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15) விதி **18** (a) –ல் சொல்லப்பட்டபடி கலகம் (Riot) அல்லது வெளிப்படையான வன்முறை (Open Violence) இயற்கை சீற்றத்தால் பேரிழப்பு ஆகிய காரணங்களில் ஏதாவது ஒன்று இருந்தால் மட்டுமே தேர்தல் நிறுத்தப்படலாம். இவ்வாறு தேர்தலை நிறுத்தினால் அதனை உடன் அறிவிப்புச் செய்வதுடன் மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல்

**...3**

ஆணையத்திற்கு அறிவித்தல் வேண்டும். தேர்தல் அலுவலரால் இதற்கு மாறாக வேறு எக்காரணம் கொண்டும் தேர்தல் கண்டிப்பாக நிறுத்தப்படக்கூடாது. அவ்வாறு தேர்தல் நிறுத்தும் அலுவலர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

16)தேர்தல் பணிகள் முடிவுற்ற பின்னர் அனைத்து தேர்தல் ஆவணங்களையும் (Election Records) மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டவரிடமோ முறையாக ஒப்படைத்தல் வேண்டும்.

17)தவிரவும் சட்டம், விதிகள் மற்றும் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளுக்குட்பட்டு, தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட தேர்தல் பணிகளை நியாயமாகவும், சுதந்திரமாகவும் (Free and Fair) இந்த அலுவலர்கள் கண்டிப்பாக நடத்திட வேண்டும். தவறிழைப்போர் துறை அளவிலான கடும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுவதுடன், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 157–ன் கீழும் நடவடிக்கைக்கும் உட்படலாம்.

(ஒம்/–)
ஆணையர்